Linking up of Southern Rivers.

*148 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have submitted a Memorandum to the Irrigation and Power Commission to investigate the linking up of Southern Rivers : and

(*b*) if so, the details of the same ?

தென்னட்டு நதிகளை இணைத்தல்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென்னட்டு நதிகளை இணைப்பது பற்றி புலனய்வு செய்யும்படி, பாசன-மின்சக்தி ஆணைக் குழுவிற்கு அரசு குறிப்பாணை ஒன்றை அனுப்பியுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) காவிரியுடன் கங்கையை இணைப்பதற்கான தேசிய ஆறுகள் இணைப்புத் திட்டத்தின் ஒரு பாகமாக கோதாவரி காவிரி இணைப்புக் கால்வாய் திட்டம் பற்றிய புலனய்வு, அதை நிறைவேற்றுதல் தொடர்பாக முன் நடவடிக்கைகள் எடுக்குமாறு, தமிழ்நாடு அரசு பாசன ஆணைக்குழுவிற்கு அளித்த தொடக்க நிலைக் குறிப்பில் கேட்டுள்ளது. ஆந்திர மாநிலத்தின் ஆறுகளான கோதாவரி, கிருஷ்ண ஆகியவற்றின் உபரி நீரையும் கேரள மாநில ஆறுகளின் உபரி நீரையும் தமிழகத்தின் பயனுக்காகத் திருப்பி விடுவதற்கான வாய்ப்பு குறித்தும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Lower Nirar Dam.

*149. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state the total amount of benefit derived by the phased programme for the utilisation of the irrigation potential of the lower Nirar Dam ?

கீழ் நீராறு அணை.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

கீழ் நீராறு பாசன வளத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கான படிப்படியான திட்டத்தால் கிட்டிய மொத்தப் பயன் எவ்வளவு ?

[1972 ஆகஸ்ட் 21

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கீழ் நீராறு அணையும், அதனோடு தொடர்புடைய சுரங்கப்பாதையும் கட்டுவதற்கு கேரள அரசின் இசைவு எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்த சுரங்கப் பாதை 5 மைல் நீளமுள்ளதாக இருக்கும். கீழ்நீராறு அணை மூலம் ஆண்டொன்றுக்கு 2,500 மிலியன் கன அடி நீரைப் பயன்படுத்த தமிழக அரசுக்கு உரிமை உள்ளது. இந்நீரால் சுமார் 21,000 ஏக்கர் நிலங்கள் பயனடையும்.

Pilavukkal Project.

* 150. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether actual excavation work has commenced on the Pilavukkal Project in Srivilliputhur Taluk;

(*b*) the present stage of the work : and

(*c*) when the work is expected to be completed ?

பிலவக்கல் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில் பிலவக்கல் திட்டத்தில் மண் அகழ்தல் பணி ஆரம்பிக்கப்பட்டு விட்டதா ?

(இ) அப்பணியின் தற்போதைய நிலை யாது ?

(உ) எப்போது அப்பணி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) மண் அணை, ஆற்று மதகுகள், கால்வாய் மதகுகள் இவற்றை அமைக்கும் வேலை நடந்தேறி வருகிறது.

(உ) 1974-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இத்திட்டம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.